**தலைப்பு – 142 தேசிய மரபுரிமைகள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1 அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 207 | தொல்பொருளியல் திணைக்களம் |
| 208 | தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் |
| 209 | தேசிய சுவடிகள் திணைக்களம் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய மரபுரிமைகள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள், மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அவ்வமைச்சினதும் திணைக்களங்களினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
| --- | --- | --- |
| 142 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2015 ஒக்தோபர் 28 |
| 207 | தொல்பொருளியல் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 19 |
| 208 | தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 28 |
| 209 | சுவடிகள் திணைக்களம் | 2015 ஒக்தோபர் 19 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,584,384,200 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,510,447,680 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புகள் ரூபா 5,079,541 இற்கும் ரூபா 45,818,650 இற்கும் இடைப்பட்ட அளவில் அதாவது

தேறிய நிதி ஏற்பாட்டில் 1.94 சதவீத்திற்கும் 13.90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 142 | 329,620,000 | 283,801,350 | 45,818,650 | 13.90 |
| 207 | 830,835,200 | 814,738,537 | 16,096,663 | 1.94 |
| 208 | 252,982,000 | 246,040,334 | 6,941,666 | 2.74 |
| 209 | 170,947,000 | 165,867,459 | 5,079,541 | 2.97 |
| மொத்தம் | 1,584,384,200 | 1,510,447,680 | 73,936,520 | 4.67 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 03 திணைக்களங்களுக்கான அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 14201 | 5,000,000 | 4,932,286 | 1,700,000 | 4,077,464 | 25,000,000 | 11,528,043 |
| 20701 | 42,000,000 | 38,037,570 | 22,000,000 | 25,827,678 | 140,000,000 | 100,333,823 |
| 20801 | 12,000,000 | 11,843,728 | 4,500,000 | 7,118,041 | 40,000,000 | 28,124,786 |
| 20901 | 6,000,000 | 5,710,518 | 2,600,000 | 4,847,881 | 27,000,000 | 15,505,464 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு

அமைச்சின் கீழான 02 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதி மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,862,240 ஆகும். விபரம் பின்வருமாறு.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டு நிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தொல்பொருளியல் திணைக்களம் | 7002/0000/00/0150/0013/000 | 939,036 |
| தேசிய சுவடிகள் திணைக்களம் | 7002/0000/00/0151/0013/000 | 1,923,204 |
| **மொத்தம்** | | 2,862,240 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களினதும் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 179,938,605 ஆகும். விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கிலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 6000/0000/00/0015/0183/000 | 954,894 |
| தொல்பொருளியல் திணைக்களம் | 6000/0000/00/0015/0089/000 | 156,709,834 |
| தேசிய் சுவடிகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0091/000 | 15,005,839 |
| தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0090/000 | 7,268,038 |
| மொத்தம் | | 179,938,605 |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

---------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய மரபுரிமைகள் அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்த பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியிலிருந்து 6 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 142 – தேசிய மரபுரிமைகள் அமைச்சு**

---------------------------------------------------------------------------------------

**3.1 பாதீட்டு முரண்கள்**

---------------------------------

12 செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால், அச் செலவின விடயங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு தேறிய ஏற்பாடுகளின் 29 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---------------------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக் கணனி அச்சீட்டு அறிக்கைகளின்படி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் வரவு மீதியும் அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதிக்கும் இடையே ரூபா 1,000,627 வேறுபாடு நிலவியது.

**3.3 இணக்கமின்மை**

---------------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---------------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| (i) IV ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | - | ஜனகலா கேந்திர நிலையத்தின் வதிவிட காப்பாளர் (திணைக்களமயப்படுத்தப்பட்ட) பதவிக்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சேர்க்கப்படாமல் ஓய்வுபெற்ற மதியுரையாளரொருவர் அமைய அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | - | ஜனகலா கேந்திர நிலையத்தின் மதியுரையாளர் ஓய்வுபெற்று 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் உத்தியோகபூர்வ வீடு மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பிரிவு | - | ஜனகலா கேந்திர நிலையத்தின் மதியுரையாளருக்கு உத்தியோகபூர்வ வீடொன்றில் குடியிருக்கக் கூடிய ஆகக் கூடிய காலமாகிய 05 ஆண்டுகளை விஞ்சி 26 ஆண்டுகள் குடியிருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 156 | 485,559 | ஜனகலா கேந்திர நிலையத்திலிருந்து ஓய்வுபெற்ற மதியுரையாளருக்கு வழங்கப்பட்டிருந்த முறையற்ற நியமனத்தின் அடிப்படையில் 2010 ஆம் |

ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட சம்பளம் குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3.4 செயலாற்றல்**

---------------------

**போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான பணிகள்**

------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மரபுரிமைகள் பாதுகாப்பும் மேம்படுத்தல் செயற்திட்டமும்**

------------------------------------------------------------------------------------------------------

இச்செயற்திட்டத்திற்காக 2014 ஆம் வருடத்தின் பொருட்டு ரூபா 60 மில்லியன் நிதி எற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரசித்திபெற்ற மற்றும் பிரசித்தியடையாத 100 தொல்பொருள் நிலையங்கள் தொடர்பான அறிக்கையுடன் கூடிய நிகழ்ச்சித்திட்ட உருவாக்கம், கீழைநாட்டு சம்பிரதாயத்துடன் தொடர்புடைய சாந்தி கர்மங்கள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நேரடியாக நடாத்துதல் மற்றும் அவற்றை தொலைக்காட்சி அலைவரிசைகளில் விளம்பரம் செய்தல், தலைக்குரிய ஆபரணங்கள் அணிதல் மற்றும் ஒத்திகை பார்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 30,110,442 மொத்தக் கிரயத்திலான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 60 மில்லியனில் எஞ்சிய ரூபா 30 மில்லியன் அளவிலான பெறுமதிக்காக 2014 ஆண்டிலே நடைமுறைப்படுத்துவதற்கு நிகழ்ச்சிதிட்டங்கள்/ செயற்திட்டங்கள் எதுவும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரசித்திபெற்ற மற்றும் பிரசித்திபெறாத 100 தொல்பொருள் இடங்கள் தொடர்பான அறிக்கையுடன் கூடிய நிகழ்ச்சிச்திட்டம் அடங்கிய இரு வட்டுக்களைத் நிர்மாணிப்பதற்கும் ஆரம்ப விளம்பரம் தயாரிப்பதற்கும் ரூபா 13,690,521 செலவிடப்பட்டிருந்த போதும் இந்நிகழ்ச்சி தொலைக்காட்சியூடாக விளம்பரம் செய்வதற்கு 2015 யூன் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய தொலைக்காட்சி அலைவரிசையினூடாக ''மரபுரிமைப் பாதுகாப்பு'' தொடர்பாக அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் பி.ப 4.00 தொடக்கம் 4.55 வரை 44 நிமிடங்கள் படி ஒரு நிகழ்ச்சிக்காக ரூபா 300,000 வீதம் 15 நிகழ்ச்சிகளை ஒளிப்பரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், 2014 ஆம் ஆண்டின் போது 13 நிகழ்ச்சிகளே ஒளிப்பரப்பட்டிருந்தன.

(ஆ) அநுராதபுரம் தொல்பொருள் அருங்காட்சியகத்தைப் புனரமைத்தல்

இந்த அருங்காட்சியகக் கட்டிடப் புனரமைப்பு மற்றும் கூடங்களை நவீனமயப்படுத்தல் 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. கட்டிட புனரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் 2015 யூன் மாதமளவிலும் கூடங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால், அருங்காட்சியகத்தைப் பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைக்க முடியாமலிருந்தது.

### 3.5 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) பண்டாரவளை போட்றன் பங்களாவை பாதுகாத்தல்

2014 - 2016 காலப்பகுதியின்போது தேசிய மரபுரிமைகள் பயிற்சி நிலையமொன்றாக போட்றன் பங்களாவைப் பாதுகாப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. இப்பங்களாவின் கூரையைப் புனரமைக்கும் நடவடிக்கை பண்டாரவளை பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் முதல் கட்டமாக ரூபா 2,011,000, இரண்டாவது கட்டமாக ரூபா 1,999,895 என அமைச்சிற்கு இரண்டு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பண்டாரவளை பிரதேச சபைக்கு 2014 ஆம் ஆண்டின்போது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 3,994,715 வழங்கப்பட்டிருந்தது. இத்தொகைக்குரிய செலவின விபரங்கள், அளவீட்டுப் பத்திரம் மற்றும் செய்த வேலை அறிக்கை எதுவும் 2015 யூன் மாதமளவிலும் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பங்களாவின் கூரையை பாதுகாப்பதற்காக ரூபா 4,010,895 கூட்டுத் தொகையான வேலைத் பகுதியை முடிப்பதற்கு I ஆம் மற்றும் II ஆம் கட்டமாக 02 மதிப்பீடுகள் சமர்ப்பிப்பதற்கான நியாயத் தன்மை கணக்காய்வில் புலனாகாதிருந்தது.

(iii) இவ் ஒப்பந்தத்திற்குரிய உடன்படிக்கையொன்றில் ஈடுபடவோ அல்லது வேலையை முடிக்கும் காலப் பகுதி தொடர்பான இணக்கப்பாடு பிரதேச சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ரிதிகலை தொல்பொருள் இடங்களின் பாதுகாப்பு**

------------------------------------------------------------------------------------------

ரிதிகலை தொல்பொருள் நிலையத்தில் நுழைவாயிலைப் புனரமைப்பதற்கான முழு மதிப்பீட்டு தொகை ரூபா 6,825,888 ஆகும். இதில் ரூபா 04 மில்லியன் கெகிராவை பிரதேச செயலகத்திற்கு 2014 யூன் 18 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்நுழைவாயிலைப் புனரமைக்கும் வேலையை 2014 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்து செலவின விபரங்களை சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டிருந்தது.

2015 மே 21 ஆந் திகதிய NH/4/1/2/7/60 ஆம் இலக்க உதவி பணிப்பாளரினால் (திட்டமிடல்) கெகிராவை பிரதேச செயலாளருக்கு எழுதிய கடிதத்தின்படி குறிப்பிட்ட வீதியை மோட்டார் கிரேடர் மூலம் திருத்தியமைத்து வடிகாலை அமைக்கும் வேலை மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததாக வெளிக்கள ஆய்வு நடவடிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரதேச செயலகத்திற்கு பணம் செலுத்தப்பட்டு கிட்டதட்ட ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் மதிப்பீட்டின் 1, 2 மற்றும் 3 பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ii) மதிப்பீட்டின் 4,5,6, மற்றும் 7, வேலைப் பகுதிகளான 3024 கன மீற்றர் குருணிக் கற்கள் வழங்கி வீதியில் பரப்புதல் மற்றும் 05 மதகுகளை நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டு தொகையான ரூபா 5,390,495 ஆன வேலைப் பகுதி 2015 மே 21 திகதி அளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 யூன் 16 ஆந் திகதிய அனு/21/3/1 ஆம் இலக்க கெகிராவை பிரதேச செயலாளரினால் அமைச்சின் செயலாளருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அத்திகதி வரையான செலவினம் ரூபா 761,017 மாத்திரமென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) மதிப்பீட்டின் 1 தொடக்கம் 07 வரையான ரூபா 6,094,543 கூட்டுப் பெறுமதியான வேலைப்பகுதிகளில் நிறைவேற்றப் பட்டுள்ள வேலைகளின் அளவு 12 சதவீதமாகும். அத்துடன் வழங்கப்பட்டிருந்த பணத்தில் செலவிடப்பட்டிருந்த அளவு 19 சதவீதமாகும். அதன் பிரகாரம், செயற்திட்டத்தை நிறைவேற்றுவதின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

(v) இவ் ஒப்பந்தத்தை கெகிராவை பிரதேச சபையிடம் கையளிக்கும்போது உடன்படிக்கையை மேற்கொள்வதற்கோ அல்லது வேலையை பூர்த்தி செய்யும் காலப்பகுதி தொடர்பாக உடன்பாட்டிற்கு வருதலோ இடம்பெற்றிருக்கவில்லை.

**(இ) ரிதிகலை தொல்பொருள் இடத்திற்கு மின்சாரம் வழங்கல்**

---

சுமார் 2.8 கீலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ரிதிகலை தொல்பொருள் நிலையத்திற்கு மின்சாரம் வழங்குவதற்காக 2014 ஜனவரி மாதத்தில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 6,979,000 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை மின்சார சபையினால் அனுப்பப்பட்டிருந்த 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின்படி, மின்சாரம் வழங்குவதற்கான கிரயம் ரூபா 6,333,912 ஆகவும் ரூபா 645,087 தொகை எஞ்சியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. இம் மீதிப் பணத்தை மீளப் பெறுவதற்கு 2015 யூன் மாதமளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்சார சபை குறிப்பிட்ட மின்சார வழங்கலை 2015 யூன் மாதமளவில் பூர்த்தி செய்திருந்த போதிலும், கட்டிடத்திற்கு உள்ளே மின்சார முறைமை நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் காரணமாக தொல்பொருளியல் நிலையத்திற்கு வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 நட்டங்களும் இழப்புகளும்

திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரது பொறுப்பில் இருந்த ரூபா 115,000 பெறுமதியான மடிக் கணனி 2012 திசெம்பர் மாதத்தில் காணாமல் போயிருந்தது. இது தொடர்பான ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கையொன்று 2015 மே மாதமளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பொலிசாரினால் பரிசோதனை நடாத்தப்பட்டிருந்ததுடன், அதன் பெறுபேறுகள் திருப்தியற்ற விதத்தில் இருந்தால் ஆரம்ப அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் ரூபா 115,000 பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணீ | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 13 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 47 | 34 | 13 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 23 | 01 |
| (v) | ஏனைய | 04 | 02 | 02 |
| | மொத்தம் | 91 | 74 | 17 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 17 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 207 - தொல்பொருளியல் திணைக்களம்

---

### 4.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

---

20701 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இற்கான இணக்கக் கூற்று 238/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் 2015 ஏப்ரல் 30 ஆந் அளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2015 மே 26 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 ஆவணங்கள் மற்றும் ஏடுகளைப் பேணாமை

---

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 802 இன் பிரகாரம் வாகனப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டு முரண்

---

எட்டு செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

### 4.4 பொது வைப்புக் கணக்கு

---

2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 02 வருடங்களைக் கடந்த ரூபா 8,456,333 ஆன 25 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

---

20701 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 2,205,729 ஆன கடன் மீதிகளின் கூட்டுத் தொகையில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வந்த ரூபா 1,077,662 கூட்டுத் தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 4.6 நல்லாளுகையும் கணக்களித்தகைமையும்

### 4.6.1 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

மீளாய்வாண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் கூட்டத் தொடரொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 4.7 சொத்து முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) ரங்சாமடம அருங்காட்சியகம் திறந்து வைக்கப்படாமை**

ரங்சாமடம பிராக் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அருங்காட்சியக நிர்மாணத்திற்காக 2011 ஆம் ஆண்டின்போது ரூபா 5.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. காணியின் உரித்தினை திணைக்களம் கையேற்காமை மின் இணைப்பு வழங்காமை, கட்டிடங்களின் பராமரிப்பு, நுழைவு வீதி மற்றும் பொது வசதிகள் வழங்கப்படாமை போன்ற சிக்கல்கள் தீர்வு செய்யப்படாமையால் 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) தீகவாபி அருங்காட்சியகத் திருத்த நடவடிக்கைகளை இடை நடுவில் நிறுத்துதல்**

அருங்காட்சியகக் கட்டிடத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 385,033 தொகையும் ரூபா 1,186,320

பெறுமதியுமான மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் புனரமைப்பு நடவடிக்கைககள் ஆரம்பிக்கப்பட்டு கூரையின் திருத்த வேலைகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு புனரமைப்பு வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. பூர்த்தி செய்யப்பட்ட பகுதிக்கு முகட்டு ஓடுகள் இடப்படாமல் இருந்தமையால் கட்டிடம் மற்றும் கூரையின் கம்புகள் 2015 மே மாதம் அளவிலும் மழையில் நனைந்த வண்ணம் காணப்பட்டன. 263 அருங்காட்சிப் பொருட்களும் கட்டிடத்தின் அறையொன்றில் வைக்கப்பட்டு பாதுகாப்பற்ற விதத்தில் காணப்பட்டதுடன் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக அருங்காட்சியகம் 2011 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மூடப்பட்டிருந்தது.

(iii) **வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 31 ஆம் திகதி அளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் / அருங்காட்சியகங்கள் வசமுள்ள நூதனப் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.8 இணக்கமின்மை

---

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நிதிப் பிரமாணம் 395(இ) | யாழ்பாணம் தொல்பொருளியல் பிராந்திய அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கிற்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் மாதம் முதல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட வேண்டிய வாகனங்கள் தொடர்பான மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 4.9 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் உள்ள பலவீனங்கள்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல், செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

திணைக்களத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | அம்பலன்தொட வெலிபடன்வில கங்காராமய | 4,429,276 | 2014.03.12 | 2015 பெப்ரவரி மாதம் வரை தாமதித்து செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டமை |
| (ii) | கோடடே இராசதானியைச் சுற்றிய பிரதேசத்தின் ஆய்வுகளின் 2 ஆம் கட்டம் | 196,665 | 2014.10.01 | மழை காரணமாக பௌதீக பணிகளை செய்ய முடியாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | வெரகொட தூபி கட்டிடத்தின் பாத பாதுகாப்பு | 255,900 | 2014.01.21 | மத்திய கலாசார நிதியத்திடமிருந்து நிதி கிடைக்காமை |
| (iv) | வடமாகாண தொல்பொருளியல் இடங்கள், நினைவுச் சின்னங்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தும் ஆய்வுகள் | 131,679 | 2014.03.03 | நிதி சேமிக்கப்பட்டால் அடுத்த கட்டத்திற்காக பயன்படுத்தல் |

## (ஆ) செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதில் தாமதம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட திகதிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பௌதீக செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பின்வருமாறு தாமதம் இடம்பெற்றிருந்தது.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்த திகதி | 2014 திசெம்பர் 31 வரையில் நிதி முன்னேற்றம் | 2014 திசெம்பர் 31 வரையில் பௌதீக முன்னேற்றம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | | |
| (i) | கிரந்த புஹுூவெல பூர்வராம ஆவசகே பாதுகாப்பு | 1,788,783 | 2014.05.10 | 2014.10.07 | 13 | 31 | மதிப்பிடப்பட்ட முழுப் பணமும் ஒரே தடவையில் கிடைக்காமை |
| (ii) | மெதிலிய அம்பலம மற்றும் போதனை மண்டபப் பராமரிப்பு | 2,620,380 | 2014.07.24 | 2014.12..31 | 14 | 50 | 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டது. |
| (iii) | கண்டி உல்பத்கே பாதுகாப்பு | 38,085,685 | 2014 சனவரி | 2014 திசெ. | 05 | 35 | தேவையான பொருட்களை விரைந்து வழங்க முடியாமை |
| (iv) | நாலந்த கெடிகே விஹாரையின் பெத்மகத் தயாரிப்பு | 509,000 | 2014.05.01 | 2014.09.15 | 42 | 31 | வழங்குனரால் உரிய நேரத்தில் பொருட்கள் வழங்கப்படாமை |
| (v) | சாகம தாகப பாதுகாப்பு | 1,599,500 | 2014.02.20 | 2014.09.10 | 02 | 40 | காரணம் குறிப்பிடப்பட |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வில்லை |
| (vi) | சித்துல்பவ்வ லென் விஹாரை அருகிலான படிகள் | 271,205 | 2014.09.10 | 2014.11.30 | - | 35 | காரணம் குறிப்பிடப்பட வில்லை |

### 4.10 செயலாற்றல்

---------------------

2014 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு, செலவுத் திட்டம் மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் அமைச்சின் செயன் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

**(அ) போதியளவு நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

-------------------------------------------------------------------------------

அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தமை கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(i) **தீகவாபி தாது கோபத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்காமை**

----------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக கீழ்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- தீகவாபி சைத்திய பாதுகாப்பிற்காக குறிப்பான நேர அட்டவணையுடன் கூடியதாக முடிக்கப்பட வேண்டிய வேலைப் பகுதி கட்டம் கட்டமாக வகைப்படுத்தப்பட்டு, தேவைப்படின் புலமை வாய்ந்தவர்களது உதவியையும் பெற்றுக்கொண்டு ஆரம்பத் திட்டமொன்றைத் தயாரித்து ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கும்படி 2014 செப்டெம்பர் 05 திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் மாதம் 15 ஆந் திகதியளவிலும் குறிப்பிட்ட ஆரம்பத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- தீகவாபி தூபியைச் சுற்றி அமைந்துள்ள சுமார் 18 அடி உயரமான சைத்திய உறுதியற்று இருந்தமையால் அதில் ஏறக்குறைய 95 சதவீதம் கழற்றி அகற்றப்பட்டிருந்தபோதும், பாதுகாப்பு நடவடிக்கைகள்

அதனுடன் ஆரம்பிக்கப்படாமையினால் தாகபை முழுமையாக வெறுமையாக இருந்தது. இதனால் காலநிலை மாற்றம் காரணமாக இடருக்குட்படக்கூடிய வாய்ப்பிருந்தது. இது தொடர்பாக 2014 டிசம்பர் 24 ஆம் திகதிய உதவிப் பணிப்பாளர் (கிழக்கு) கடிதத்தின் மூலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும் 2015 மே மாதம் இறுதியளவிலும் குறிப்பிட்ட பாதுகாப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது 377,000 செங்கற்கள் ரூபா 6,032,000 இற்கு வேலைத் தளத்திற்கு வழங்கப்பட்டிருந்தபோதும், அதில் லொட் இல 04, 05 மற்றும் இலக்கமிடப்படாத செங்கல் குவியல்களில் சில சிறிதளவு கரைந்தவாறிருந்தன. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட P.S.I. பெறுமதி தொடர்பான மாதிரி ஆய்வு அறிக்கையின்படி லொட் இலக்கம் 01 இல் 7825 செங்கற்கள் தவிர மற்றைய செங்கல்கள் SLS 38:1978 மாதிரியின்படி Type II, Grade 2 நியமத்திற்கு உட்பட்டதாக உறுதி செய்யப்பட்டிருந்தது. செங்கற்கள் வேலைத் தளத்திற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நேரடிப் பரீசீலனைக்கு உட்படுத்தப்படாது கையிருப்புப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் எவ்வளவு தகுதியற்ற செங்கற்கள் வேலைத்தளத்தில் காணப்படுகின்றன என்பது செங்கற்கள் வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேலாகியும் கணக்கெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) **நீலகிரிய தூபியை பாதுகாத்தல்**

-----------------------------------------------------------

அம்பாறை மாவட்டத்தில் லாஹுகலை வனாந்திரத்தினுள் அமைந்துள்ள நீலகிரி தூபியின் அகழ்வு வேலை முடிக்கப்பட்டு சுற்று 600 அடியிலும் கூடியதும் 21.4 மீற்றர் உயரமுமுடைய தூபி அமைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தாது கோபுர பாதுகாப்பிற்காக குறிப்பான நேர அட்டவணையுடன் கூடிய பூர்த்திசெய்யப்பட வேண்டிய வேலைப் பகுதி கட்டம் கட்டமாக வகைப்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட பூரணத் திட்டமொன்று இருக்கவில்லை.

- அகழ்வு மேற்கொள்ளப்பட்டு தாகபை வெளிப்பட்ட பின்னர் தாகபையைச் சுற்றி நிரந்தரமானதும் பலமானதுமான சுவரொன்று காணப்படாதிருந்ததுடன், முறையான பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படாமையினால் காலநிலை மாற்றம் காரணமாக இடருக்குட்படக்கூடிய வாய்ப்பிருந்தது.

- தூபியின் பேசா வளலு பாதுகாப்பு நடவடிக்கை அரைவாசி மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருக்கையில் 2014 ஒக்டோபர் 29 ஆந் திகதி நிறுத்தப்பட்டு இருந்ததுடன் 2015 மே மாதமளவிலும் மீண்டும் பாதுகாப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கான மதிப்பீடு அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை.

- தாது கோபுரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் அகழ்வு மேற்கொள்ளபட்ட இடங்களில் தொல்பொருள் மூடப்படும் விதத்தில் மழைக் காலங்களில் நீர் ஒன்றுசேர்வதனால் நீர் வடிந்தோடுவதற்கான முறையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது.

**(iii) யுதகணாவை தாது கோபுர பாதுகாப்பு**

--------------------------------------------------------------------

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திணைக்களத்தின் பொருட் கொள்வனவுக் குழுவினால் 2014 மே 07 ஆந் திகதி மற்றும் 2014 நவம்பர் 13 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, ஒன்று ரூபா 16 வீதம் 418,803 செங்கற்கள் யுதகணாவை தாகபை பாதுகாப்பிற்காக கட்டளையிடப்பட்டிருந்தது. எனினும், 2015 யூன் மாதமளவிலும் கட்டளையிடப்பட்டிருந்த 112,253

செங்கற்களை வழங்குவதற்கு வழங்குனர்கள் தவறியிருந்தனர்.

- பாதுகாப்பு நடவடிகக்கைகளுக்காக 2011 ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 82 சீமெந்து மூடைகள் காலாவதியாகி இருந்ததுடன் 2014 திசெம்பர் 01 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 47 சீமெந்து மூடைகள் 2015 மே 21 ஆந் திகதி அளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தன.

**(iv) இரத்தினபுரி எஹலேபொல அந்தப்புர மாளிகையை திருத்தியமைக்கும் நடவடிக்கைகளின் தாமதம்**

---

இரத்தினபுரி நகரத்தில் பேர்கியுஸன் மகளிர் பாடசாலைக்கு அருகிலான உயர் நிலத்தின் அரைப்பங்கில் அமைக்கப்பட்டிருந்த இரண்டு மாடிக் கட்டிடமான எஹலேபொல அந்தப்புர மாளிகை 2010 ஆம் ஆண்டில் தொல்பொருள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இக்கட்டிடத்தின் திருத்த வேலைகளுக்காக முறையே ரூபா 2,847,610, ரூபா 1,563,757 மற்றும் ரூபா 4,256,878 என மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் இத் திருத்த நடவடிக்கை சப்ரகமுவ மாகாண சபையின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகத்தினால் நிறைவேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ் அலுவலகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 6,575,000 ஆன செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுமாறு திணைக்களத்தினால் கோரப்பட்டிருந்தது.

தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் 2014 யூலை 28 ஆந் திகதி ரூபா 1,064,220 மற்றும் 2014 திசெம்பர் 31 திகதி ரூபா 5,507,780 என மொத்தம் ரூபா 6,572,000 பணம் கொடுக்கப்பட்டிருந்ததுடன், 2015 மே 31 ஆந் திகதி அளவிலும் தொல்பொருள் நினைவுச் சின்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் பொறியியல் சேவை அலுவலகத்துடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவுமில்லை.

**(v) நூலகப் புத்தகங்கள் மற்றும் நிழற்படப் பிரதிகளின் பாதுகாப்பு**

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தலைமை அலுவலக வளவில் அமைந்துள்ள நூலகத்தில் இருந்த பெறுமதியான புத்தகங்களில் அதிகளவு பாதிப்பிற்குள்ளான புத்தகங்கள், சிறிதளவு பாதிப்பிற்குள்ளான புத்தகங்கள் மற்றும் குறைந்தளவு பாதிப்பிற்குள்ளான புத்தகங்கள் முறையே 2000, 3000 மற்றும் 1000 என அடையாளம் காணப்பட்டிருந்தன. இப் புத்தகங்களைப் பாதுகாப்பதற்கான தேவை 2001 ஆம் ஆண்டிலிருந்து சுட்டிக் காட்டப்பட்டிருந்தபோதும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- அனுராதபுரம், பொலனநறுவை, சீகிரிய, மற்றும் மிஹிந்தலை போன்ற இடங்களின் புராதன இடங்களைக் கேந்திரமாகக் கொண்டு 1868 மற்றும் 1880 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட அரிதான 227 புகைப்படங்களுடன் கூடிய ‘‘லோடன் புகைப்பட ஆல்பம்’’ மற்றும் ஏனைய அரிதான புத்தகங்களில் உள்ளடங்கும். தகவல்கள் எதிர்காலச் சந்ததியினர் பொருட்டுப் பாதுகாக்கப்படும் நோக்கத்தோடு நுண்ணிய புகைப்படங்களாகவோ (Micro Film) அல்லது புகைப்படங்களாகவோ (Scan) எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**(vi) ப்றாக் வரலாற்று மானிட விஞ்ஞான அருங்காட்சியக நடவடிக்கைகளை ஆரம்பித்தல்**

----------------------------------------------------------------------------------------------------

தொல்பொருளியல் துறைக்குள் ப்றாக் புராதன மானிட விஞ்ஞான அருங்காட்சியகத்தை அமைப்பதன் மூலம் புராதன மானிடரின் வெவ்வேறு நடைமுறைகள், தொழில்நுட்பம், ஆக்கத்திறன் மற்றும் அக்காலத்தில் காணப்பட்ட தாவரம், விலங்குகள், உலகளாவிய சூழல் நிலைமைகள் தொடர்பான நெருங்கிய அனுபவத்தைச் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு மற்றும் ஆய்வு செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதாக அருங்காட்சியகப் பிரிவின் அறிக்கையில் கண்டறியப்பட்டது. 2007 ஆம் ஆண்டில் புளத்சிங்கள பாஹியன்கலைக்கு அருகில் இவ்வருங்காட்சியகத்தை

நிர்மாணிப்பதற்கு இரண்டு மாடிக் கட்டிடத்திற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, காட்சிப்படுத்தல் கூடமொன்றை உருவாக்குவதற்காக ரூபா 363,038 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் காணியின் எல்லையை அடையாளமிடும் வேலை நடைபெற்றபோதும், குறிப்பிட்ட காணியின் உரிமை தொடர்பாகப் பிரச்சினை மற்றும் நிதி ஏற்பாடு தொடர்பான பிரச்சினை என்பன காரணமாக நிர்மாணப் பணி திட்டமிடப்பட்டு 07 வருடங்களுக்கு மேலாகியும் அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.11 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்**

---

**சீராக்கம் செய்யப்பட வேண்டிய மீதி**

---

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் 2008 சனவரியில் இனங் காணப்பட்ட 03 வரவு மீதிகளின் கூட்டுத் தொகையான ரூபா 1,009,990 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**4.12 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

**எரிபொருள் வழங்கல்**

---

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தான நான்கு உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற போக்குவரத்துப் படிகளுக்கு மேலதிகமாக 2006 யூலை 14 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் மார்ச் மாதம் முதல் ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 6071 லீற்றர் எரிபொருள், எரிபொருள் கட்டளை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**4.13 நட்டங்களும் இழப்புகளும்**

---

தீகவாபி தாது கோபுரத்தை பாதுகாப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மணல் இருப்புக்களில் ரூபா 113,430 பெறுமதியான 19.90 கியூப் மணல் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.14 முகாமைத்துவ நலிவுகள்**

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) தொல்பொருளியல் வெகுமதி நிதியம்**

---------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் கீழ் தொல்பொருளியல் வெகுமதி நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டப்பணம் இந்நிதியத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 64,105,390 தொகை 2014 மே 31 ஆம் திகதியளவிலும் நிதியம் உருவாக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கிலிருந்தது.

(ii) கலென்பிந்துனுவெவ பொலிசாரினால் கஹட்டகஸ்திகிலிய நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த மூன்று வழக்குகளுக்கு 2010 ஆம் ஆண்டில் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்களில் தொல்பொருளியல் வெகுமதி நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 6.45 மில்லியனில் ரூபா 1.45 மில்லியன் மாத்திரமே நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தது.

**(ஆ) மத்திய மாகாணத்தின் கொள்வனவு நடவடிக்கைகளில் முறைகேடுகள்**

---------------------------------------------------------------------------------------------------------------

2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மத்திய மாகாணத்தின் தொல்பொருளியல் பிராந்திய அலுவலகத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பில் முறைகேடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. முறைகேடுகள் தொடர்பில் ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டிருந்த போதிலும், அவ்விசாரணைகளின் கட்டளைகளுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தமையால் மீண்டும் ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமைச்சு இணங்கியிருந்தது. அதன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் ஐந்து

உத்தியோகத்தர்களுக்கு எதிராக வரைவுக் குற்றச்சாற்றுப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு 2015 மார்ச் 11 ஆந் திகதி தொல்பொருளியல் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு கையளிக்கப்பட்டு 03 மாதங்கள் கடந்த பின்னர் ஆவணங்களில் மூலப்பிரதியோ அல்லது சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளின் பகுதியோ இல்லையெனக் குறிப்பிட்டு 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் உரிய உத்தியோகத்தர்களுக்கு குற்றச்சாட்டு பத்திரங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அலகேஷ்வர வலய அலுவலகம் மற்றும் களஞ்சிய நிர்மாணம்**

கோட்டே அலகேஷ்வர வேலைத்தளத்தில் வலய அலுவலகம் மற்றும் களஞ்சியக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,281,188 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், காணியின் திட்டவரைபடம் திணைக்களத்திடம் இல்லாமையால் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின்போது காணியின் திட்டவரைபடம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், கட்டிடத் திட்டத்திற்காக சபையின் அங்கீகாரம் 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையால் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 4.15 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 52 | 11 | 41 |
| மூன்றாம் மட்டம் | 56 | 26 | 30 |
| இரண்டாம் மட்டம் | 737 | 487 | 250 |
| ஆரம்ப மட்டம் | 1,610 | 1,330 | 280 |
| மொத்தம் | 2,455 | 1,854 | 601 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் பிரிவுத் தலைவர் பதவிகளுக்குரிய பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் போன்ற 52 சிரேஷ்ட நிலை பதவிகளில் 41 பதவிகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ii) திணைக்களத்திற்காக 44 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அப்பதவிகளில் 21 வெற்றிடங்களாக காணப்பட்டன.

(iii) சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தரொருவரின் சேவைக் காலத்தில் பெற்றுக்கொண்ட சம்பளமற்ற விடுமுறை அரைச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை என்பவற்றிற்காக ரூபா 136,558 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 5. தலைப்பு 208 – தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம்

### 5.1 பாதீட்டு முரண்கள்

இரண்டு செலவின விடயங்களுக்காக மிகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 34,200,000 கூட்டுத் தொகையான தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 6,872,000 வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. எஞ்சிய தேறிய நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 18 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தன.

### 5.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

20801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 548,809 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**5.3 சொத்து முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டில் இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கொழும்பு அருங்காட்சியக வளவில் நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்த 02 மாடிகளுடன் கூடிய வீட்டில் 1209 சதுர அடி அளவிலான மேல் மாடியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 9,430,200 ஆக இருந்தது. வீட்டுத் தளபாடங்கள் வழங்கப்படாதிருந்த 02 அறைகளுடன் கூடிய இப்பகுதி 2015 யூன் மாதம் வரையளவிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

**5.4 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

கண்டி அருங்காட்சியக வளவில் கழிவறைத் தொகுதியை புதுப்பிப்பதற்காக கட்டிட திணைக்களத்தினால் ரூபா 3,870,000 ஆன மதிப்பீடொன்று 2013 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் இத்திருத்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 தாமதமான செயற்திட்டங்கள்**

திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கீழ்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட முடியாதிருந்தன.

(அ) கண்டி அருங்காட்சியகத்தின் அருங்காட்சியகக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ வீட்டினைப் புதுப்பிப்பதற்காக முறையே ரூபா 16,990,000 மற்றும் ரூா 3,400,000 என 2014 ஆம் ஆண்டின்போது கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2014 செப்டம்பர் 10 ஆந் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை திருத்த வேலைகள் காரணமாக அருங்காட்சியகம் மூடப்படுவதாக அறிவித்தல் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் மாதமளவிலும் குறிப்பிட்ட திருத்த நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாமையால் அருங்காட்சியகத்தைத் திறப்பதற்கு முடியாமலிருந்தது.

(ஆ) கொழும்பு அருங்காட்சியக வளவில் என்புக் கூடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2013 மே 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 09 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், பல சந்தர்ப்பங்களில் காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. திமிங்கிலத்தின் என்புத் தொகுதியை பொருத்தும் நடவடிக்கை மற்றும் ஏனைய என்புத் தொகுதிகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் முடியும்வரை நிலக் கல் பதிக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்க முடியாமலிருந்ததுடன், 2015 யூன் மாதமளவிலும் என்புத் தொகுதியைப் பொருத்தும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------

பத்து வருட காலத்திற்கு தேசிய அருங்காட்சியக வளவிலுள்ள இரண்டு மாடி கட்டிடத்தின் 8000 சதுர அடியுடனான இடத்தையும் அதற்குரிய பொது வசதிகளுடன் கூடிய அருங்காட்சியக நினைவு கூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றையும் நடாத்துவதற்காக இலங்கை கைப்பணிகள் சபையுடன் 2011 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ஏற்படுத்திய உடன்படிக்கையின்படி அவை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட குத்தகை உடன்படிக்கை மற்றும் லக்சலவை நடாத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கைப்பணிகள் மன்றத்தினால் அருங்காட்சியக வளவில் அமைக்கப்பட்டிருந்த குத்தகைக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும்போது அருங்காட்சியத்திற்குரிய தச்சுக் கைத்தொழில் அலகு நிறுவப்பட்டிருந்த பழைய கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக கையேற்கப்பட்டிருந்ததுடன், 2015 யூன் மாதம் வரையிலும் அந்நிறுவனத்தின் பொறுப்பிலேயே இருந்தது.

(ஆ) 2011 ஆம் வருடத்தில் லக்சல நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின்படி கட்டிடத்தை நிர்மாணிக்கும்போது அருங்காட்சியக வளவில் காணப்பட்ட தொல்பொருள் பெறுமதியுடைய பழைமையான தூபியொன்றான விக்டோரியா சிலையை வளவிலிருந்து வெளியேற்றியதன் மூலம் அச்சிலை பெருந்தெருவிற்கு வெளிப்படையாக காணப்பட்டது. சிலையின் பாதுகாப்பு தொடர்பாக பிரச்சினை ஏற்படுவதாக பல சந்தர்ப்பங்களில் லக்சல நிறுவனத்திற்குத்

அறிவித்திருந்த போதிலும், முன்பிருந்ததைப்போன்று சிலையை நிறுவுதல் 2015 யூன் மாதம் வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) வண்டி மேடையினுள் மிகப் பழைமை வாய்ந்த 07 வண்டிகள் காட்சிப்படுத்தலுக்காகவும் லக்சல நிறுவகத்திற்கு உரித்தான 04 வண்டிகள் விற்பனைக்காகவும், ஒரே மேடையில் வைக்கப்பட்டிருந்தன. இம் மேடையின் உரிமை அருங்காட்சியகத்திற்கு உரித்தான போதிலும், அதன் திறப்பு அருங்காட்சியகத்திடம் வழங்கப்பட்டிராததுடன் அதன் பராமரிப்பு நடவடிக்கைகள் லக்சல நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக்கட்டிடங்கள் கண்ணாடிகளைக் கொண்டு முத்திரையிடப்பட்ட கட்டிடமொன்றாக அமைக்கப்பட்டிருந்த போதிலும், காற்றுச்சீராக்கி இயந்திரம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. சூரிய ஒளி மற்றும் காற்றைப் பெறுதல் உட்பட வெப்பம் குறைந்தளவில் காணப்பட வேண்டிய போதிலும், அத்தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 02 நிறுவகங்களின் நோக்கத்திற்காக ஒரே மேடையில் பழைமையான பொருட்கள் வைக்கப்படுகின்றமையால் அவற்றின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சிக்கல் ஏற்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் சில பிரிவுகளைத் (பாதுகாப்பு வழங்கல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் போன்ற) திருத்தம் செய்வதற்கு இரண்டு தரப்பினரும் இணக்கமளித்திருந்தபோதிலும், 2015 யூன் மாதம் வரையிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.8 நட்டங்களும் இழப்புகளும்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மார்ச் 16 ஆம் திகதி கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற களவினால் காணாமற்போன நூதனப்பொருட்களின் எண்ணிக்கை 221 ஆக காணப்பட்டதுடன் அப் பொருட்களின் பெறுமதி ரூபா 4,440,140 ஆக மதிப்பிடப்பட்டிருந்தன. இதில் 94 பொருட்கள் ஆரம்ப நிலையிலும் 57 பொருட்கள் துண்டுகளாகவும் கற்களாகவும் பொருட்கள் மீளக் கிடைத்திருந்ததுடன் ஏனைய பொருட்கள் வெட்டப்பட்டு நொருக்கப்பட்டிருந்தமையால் சேதமுற்றும் இருந்தன. 2015 யூன் மாதமளவிலும் நீதிமன்றச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு அருங்காட்சியகத்தின் பிரதான படிக்கட்டின் இடது பக்கம் 2013 மார்ச் 28 ஆம் ஆண்டின்போது உடைந்ததன் காரணமான திருத்த வேலைகளுக்காகவும் 2014 ஆம் ஆண்டின்போது கட்டிடத்தின் சுவர் மற்றும் கூரையின் திருத்த வேலைகளுக்காகவும் அருங்காட்சியகத்தின் சில காட்சிக் கூடங்களை மூடுவதற்கு நேர்ந்தமையால் நிர்ணயிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் அரைப்பங்கை மாத்திரம் அறவிட நேர்ந்தது. 2012 ஆம் ஆண்டின்போது பார்வையாளர்களின் எண்ணிக்கை 219,161 முதல் 2014 ஆம் ஆண்டின்போது 250,333 வரையான கூடிய எண்ணிக்கையைக் கொண்டிருந்த போதிலும், நூதனசாலையின் வருமானம் ரூபா 16,646,570 முதல் ரூபா 12,357,560 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 5.9 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2014 நவம்பர் 16 ஆந் திகதியன்று இரவு நூதனசாலையின் மேல் மாடியில் அமைந்துள்ள துணிகள் மற்றும் மட்பாண்டக் கூடத்தின் நுழைவாயில் கதவினது தாழ்ப்பாள் உடைக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற களவின் பின்னர் அருங்காட்சியக வளவில் விசேட பாதுகாப்பு நடைமுறை செயற்படுத்தப்பட்டிருக்கையில், இவ்வாறாக அத்துமீறிய உட்பிரவேசம் இடம்பெற்றிருந்ததுடன் 2015 யூன் மாதமளவிலும் அதற்குப் பொறுப்பானவர்களை இனங் காண்பதற்கு பாதுகாப்புப் பிரிவு தவறியிருந்தது.

## 5.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 06 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 119 | 71 | 48 |
| (iv) | ஆரம்ப நிலை | 219 | 193 | 26 |
| | மொத்தம் | 353 | 271 | 82 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி அளவிலான 82 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. இவ்வெற்றிடங்களில் இரண்டு மேலதிகப் பணிப்பாளர் பதவிகளுள் மூன்றும் 06 உதவிப் பணிப்பாளர் பதவிகளுள் மூன்றும் 10 அருங்காட்சியக அத்தியகட்சகர் பதவிகளில் ஐந்தும் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் 2012 மார்ச் 16 ஆம் திகதி இடம்பெற்ற நூதனப் பொருட்கள் களவு மற்றும் 2014 நவம்பர் 16 ஆந் திகதி இரவு இடம்பெற்ற அத்துமீறிய நுழைவு போன்ற சம்பவங்களின் அடிப்படையில் அருங்காட்சியகப் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் காணப்பட்ட போதிலும், 2013 மே 23 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவியும் மற்றும் 03 பாதுகாப்பு உதவியாளர் பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. தலைப்பு 209 – தேசிய சுவடிகள் திணைக்களம்

-------------------------------------------------------------------------------------------

### 6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

2014 நவெம்பர் 04 ஆந் திகதிய 238/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 20701 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 02 மாதத் தாமதத்தின் பின்னர் 2015 யூன் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டு முரண்

-------------------------

ஐந்து செலவின விடயங்களுக்கு மிகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 27 சதவீதம் தொடக்கம் 65 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 6.3 பொது வைப்புக் கணக்கு

-------------------------------------------

இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 9,645,433 தொகையான 13 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

------------------------------------------------------------------------------------------------------

20901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 290,039 ஆகும். அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 6.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்கான கட்டிட விரிவாக்கலின் கீழ் ரூபா 638,329,722 செலவிடப்பட்டு 6836 சதுர மீற்றர் அளவிலான புதிய 04 மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடம் 2012 நவம்பர் மாதத்தில் திறந்து வைக்கப்பட்டிருந்தது. 2015 யூன் மாதமளவிலும் அலுவலக நடவடிக்கைகளுக்குத் தேவையான அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்கள் மற்றும் Mobile Racking Syastem என்பன கொள்வனவு செய்யப்படாமையால் கட்டிடம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது.

(ii) 2014 ஒக்தோபர் மாதத்தில் ரூபா 4,788,000 செலவிடப்பட்டு 03 Micro Reader Machines கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. பழைய 04 Reader Machines திணைக்களத்திடம் இருப்பதால் அவ்வியந்திரங்களை செயற்படுத்துவதற்கு கட்புலன், செவிப்புலன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அல்லது

பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் பொறுப்பில் அவை இருக்கவில்லை.

(iii) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2,757,000 செலவிடப்பட்டு ஸ்கேனர் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பழைய இயந்திரமொன்று திணைக்களத்திடம் இருப்பதால் அதனைச் செயற்படுத்துவதற்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் பொறுப்பின் கீழ் அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் பொறுப்பில் அவை இருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2015 யூன 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 இணங்காமை

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 427 | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கின் மீதிகள் திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 715(2), 751(1) மற்றும் 756 | களஞ்சியப் பொறுப்பாளர் பதவிக்கு உத்தியோகத்தரொருவர் முறையாக நியமனம் செய்யப்படாதிருந்ததுடன், இருப்புப் பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் களஞ்சியப் பொருள் மெய்மையாய்வு என்பன 2013 ஆம் ஆண்டின் பொருட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களம் ----------------------------------------------- | |
| 1944 ஆகஸ்ட் 16 ஆந் திகதிய 96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தி | முற்பணக் கணக்கு தொடர்பாக முறையான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று ணேப்பட்டிருக்கவில்லை. |

## 6.7 செயலாற்றல்

----------------------

2014 இன் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

------------------------------------------------------------------------------------------------------------

புதிய கட்டிடத்தின் வளவில் வெவ்வேறு பிரிவுகளுக்குத் தேவையான 285 தளபாடங்கள் உபகரணங்கள் உருப்படிகள், 105 கணனி உருப்படிகள் மற்றும் நான்கு மாடிகளுக்குத் தேவையான Mobile Racking System என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கான மதியுரைச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணைப் பணியகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூபா 373.5 மில்லியனில் மதியுரைக் கட்டணமான 6 சதவீதத்தின் 50 சதவீதமான ரூபா 12.5 மில்லியன் (பெறுமதிசேர் வரியுடன்) தொகையும் 2014 யூலை 04 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2015 யூன் 30 ஆந் திகதியளவிலும் உபகரணங்கள் கொள்வனவிற்கான கேள்வி கோரல் அறிவித்தல் பிரசுரிக்கப்படவில்லை.

### (ஆ) திட்டமிடல்

------------------

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முப்பத்தாறு அதி முக்கிய ஆவணப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம்

ஆண்டின்போது 21 தொகுதிகள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டிருந்தன.

(ii) காட்சிப்படுத்துதல் மற்றும் பாடசாலை மாணவர்களை அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காட்சிப்படுத்துதல் இலக்கு நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் 02 அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பதிவேடு முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் 380 வாக்காளர் பெயர் பட்டியல் தொகுதிகளை இலக்கமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 228 வாக்காளர் பெயர் பட்டியல் மாத்திரமே இலக்கிடப்பட்டிருந்தன.

(iv) அரச நிறுவனங்களின் ஆவணங்களை மீளப் பாதுகாத்தலின் கீழ் 2014 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆவணங்களின் அளவு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்ததை உறுதிப்படுத்த முடியவில்லை.

**6.8 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளின் குறைபாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சீராக்கல் தொடர்பான விபரம் | | காலப் பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடத்திற்குக் குறைவு | 03 வருடத்திற்கு மேல் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புகள் | 1,377 | 231,061 | 69,409 | 301,847 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை | 118,111 | 1,050,443 | 842,508 | 2,011,062 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 1,155,208 | 1,183,848 | 1,791,293 | 4,130,349 |
| (iv) | இனங்காணப்படாத செலவு | 121,455 | 2,402,204 | 1,022,313 | 3,545,972 |

**(ஆ) சீர் செய்யப்படாத வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள்**

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சீர்செய்யப்படாத வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் 2014 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போதும் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டு, வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 2 காசோலைகளின் கூட்டுத் தொகை ரூபா 681,594 ஆகும்.

(ii) 2014 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டு, தேறாதிருக்கும் காசோலையொன்றின் பெறுமதி ரூபா 152,900 ஆகும்.

(iii) 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இனங் காணப்படாத 13 கொடுப்பனவுகளின் கூட்டுத் தொகை ரூபா 4,007,628 ஆகும்.

(iv) 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இனங் காணப்படாத 6 பெறுவனவுகளின் கூட்டுத் தொகை ரூபா 3,273,232 ஆகும்.

**6.9 முகாமைத்துவச் செயற்திறனின்மை**

பின்வரும் செயற்திறனின்மைகள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த Alphabetical Index, Dutch Sinhalese Dictionary மற்றும் Dutch Political Council ஆகிய மூன்று புத்தகங்களின் பிரதிகள் முறையே 500, 1000 மற்றும் 500 வீதம் அச்சிடுவதற்காக ரூபா 1,383,000 செலவிடப்பட்டிருந்தது. இப்புத்தகங்களின் விற்பனை 02 ஆண்டுகள் கழிந்ததன் பின்னர் 25 சதவீத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், 2015 யூன் மாதமளவில் எஞ்சிய புத்தக இருப்புக்கள் முறையே 392, 870 மற்றும் 378 வீதம் ஆக இருந்ததுடன், அவ்வாறு எஞ்சிய இருப்புக்களின் அச்சீட்டுக் கிரயம் ரூபா 1,115,520 ஆக இருந்தது.

(ஆ) ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்காக 2013 ஆம் ஆண்டின் இறுதியில் “Sri Lanka Reflections of History” என்ற புத்தகத்தின் 1000 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 520,643 அச்சீட்டுக் கிரயமான 552 புத்தகங்கள் 2015 யூலை மாதம் அளவிலும் எஞ்சியிருந்தன.

(ஆ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்த விற்பனை குறைந்த மட்டத்தில் காணப்பட்ட 05 வகைக்குரிய 3126 பிரதிகளின் பெறுமதி ரூபா 2,061,628 ஆக இருந்தது. விற்பனை செய்ய முடியாத நிலைமையில் இருந்த இன்னும் 02 வகைக்குரிய 192 பிரதிகளும் 1426 பிரதிகளும் எஞ்சியிருந்தன.

**6.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 03 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 09 | 32 |
| (iii) | இரண்டாம் நிலை | 133 | 53 | 80 |
| (iv) | ஆரம்ப நிலை | 74 | 50 | 24 |
| | மொத்தம் | 254 | 115 | 139 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் வரையில் 139 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அரைப் பங்கிற்கு மேல் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அத்தியாவசிய திணைக்களப் பதவிகள் பலவும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.